2. அறிவிப்பு

(அ) சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு. கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் திருத்தங்கள் ஏதுமின்றி, 19-8-1972-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டன என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72).

2. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/72).

மேலும், தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) பரிந்துரை ஏதுமின்றி, 19-8-1972-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்டது என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) மணலியிலுள்ள மதருஸ் ஃபெர்டிலைசர்ஸ்-ல் நடந்த ஒப்பந்தத் தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

THIRU N. DENNIS: Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike by the contract labourers of the Madras Fertilisers in July, 1972.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: துணைத் தலைவர் அவர்களே, சங்கர் என்னும் தொழிலாளி தனது வேலையிடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்று அங்கு மிகுதி நேரம் வேலை